2013 மே 13]

*அவர்களுடைய அரசு கனிந்து பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

**திரு. ஆ. நாராயணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு, என்னுடைய சமத்துவக் கட்சியின் தலைவர் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றி கூறி அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 474, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**474—**

## வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம்

***61—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

*மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மேட்டுப்பாளையம் தொகுதி, கெம்மாரம்பாளையம் ஊராட்சிக்கென தனியாக ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தை புதிதாகத் தொடங்க, அதன் விவகார எல்லையில் குறைந்தபட்சம் 2,000 ஹெக்டேர் சாகுபடி நிலப்பரப்பு இருக்க வேண்டுமென கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, அரசாணை எண் 376-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மேற்படி நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில், கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் தொகுதி, கெம்மாரம்பாளையம் ஊராட்சிக்கு என புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம்*

துவங்குவதற்கான வாய்ப்புகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மக்கள் நலம், மக்கள் நலம், என்றே சொல்லுவார், தம் மக்கள் நலம் ஒன்றேதான் மனதில் கொள்ளுவார்" என்று வாழும் தலைவர்கள் மத்தியில், நாட்டு மக்களுக்காக நான், மக்களால் நான் என்ற உயரிய இலட்சியத்தைக்கொண்டு வாழும் மனித தெய்வம்! மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேட்டுப்பாளையம் தொகுதிக்குட்பட்ட, காரமடை ஒன்றியத்தில், காளம்பாளையம் மற்றும் கெம்மாரம்பாளையம் என்ற இரண்டு கிராமங்களை உள்ளடக்கி, ஒரு வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் இயங்கி வருகின்றது. இந்தச் சங்கம், ஏறத்தாழ 20,000-க்கு மேற்பட்ட விவசாயிகள் வாழ்ந்து வரும் ஒரு பகுதியில் அமைந்திருக்கின்ற சங்கமாகும். 40 குக்கிராமங்களை உள்ளடக்கிய ஒரு பகுதியாகும். பெரும்பாலும் விவசாயத்தையே மூலதனமாகக் கொண்டு வாழ்கிற இந்தப் பகுதியில், அந்தக் குக்கிராமங்கள் மிகப் பெரிய பரப்பளவில் அமைந்திருக்கிறது. ஒரு பகுதியிலிருந்து அந்த தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு வர வேண்டுமென்று சொன்னால், சுமார் பத்து கிலோ மீட்டர் தொலைதூரத்தில் இருந்துதான் வர வேண்டியுள்ளது. இந்த ஊராட்சியில் வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைவதற்கு சுமார் 2,000 ஏக்கர் நிலப் பரப்பு வேண்டுமென்ற ஒரு இலக்கு அடைகிற வகையில் இன்று அங்கு பெரும்பாலான விவசாயிகள் வாழ்ந்து வருகின்றார்கள். ஆகவே, தொலைதூரத்திலிருந்து காளம்பாளையத்தில் இருக்கிற அந்தத் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிக்கு வரவேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், விவசாயிகளின் நலன் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிவுடன் பரிசீலித்து, கெம்மாரம்பாளையம் என்ற அந்த ஊராட்சியில் தனியாக ஒரு

2013 மே 13]

தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தை உருவாக்கித் தர முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக கேட்டு அமருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கெம்மாரம்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள பொதுமக்கள் காளம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்துடன் இணைந்து தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து வருகிறார்கள். காளம்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தில் 1,125 உறுப்பினர்கள் தற்போது இருக்கின்றார்கள். அதில் கெம்மாரம்பாளையத்தைச் சேர்ந்த 503 பேர் உறுப்பினர்களாக உள்ளார்கள். மேலும், கெம்மாரம்பாளையத்தில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும்பட்சத்தில் தற்போது இயங்கி வருகின்ற காளம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கமானது நலிவடைந்துவிடும். மேலும், தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள கெம்மாரம்பாளையம் ஊராட்சிப் பகுதியில் 1,198 ஹெக்டேர் நிலம் மட்டுமே உள்ளது. எனவே, அந்தப் பகுதியினைச் சுற்றி தற்போது வடக்கு பகுதியில் 1½ கிலோ மீட்டர் தொலைவில் தேக்கம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கமும், மேற்குப் பகுதியில் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் வெள்ளியங்காடு கூட்டுறவுச் சங்கமும் செயல்பட்டு வருவதால், அவற்றைப் பயன்படுத்திக்கொள்ளலாம். எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கின்ற தவறுகளையெல்லாம் தற்போது களைந்து, அந்தச் சங்கங்களைப் புனரமைக்கின்ற வகையில் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பல்வேறு சலுகைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அளித்து, நிதியினையும் அளித்து, அதற்கான பணிகளை செய்து வருகின்றது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை கூட்டுறவுத் துறையின் நிதி நிலையைக் கருத்தில் கொண்டு நிறைவேற்றுவதற்கு வாய்ப்புகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.*

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மேட்டுப்பாளையம் தொகுதிக்கு உட்பட்ட, சிச்சதாசம்பாளையம் ஊராட்சியில் தற்போது ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி இயங்கி வருகிறது. இந்தக் கூட்டுறவு வங்கியில் நெல்லித்துறை ஊராட்சி, ஓடந்துறை ஊராட்சி, தேக்கம்பட்டி ஊராட்சியினுடைய ஒரு பகுதி, மேட்டுப்பாளையம் நகராட்சியில் இருக்கிற அனைத்து மக்களும் இந்த வங்கியை மையமாகக் கொண்டுதான் செயல்பட்டு வருகிறார்கள். மிகப் பெரிய பரப்பளவு கொண்டதாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததைப்போல் இது 2,000 ஏக்கருக்கு மேலாக விவசாயம் செய்து, வாழும் ஒரு பகுதியாகும். ஆகவே, இதனைக் கருத்தில் கொண்டு மேற்சொன்ன ஐந்து பகுதிகளை உள்ளடக்கிய ஒரு சங்கம் இயங்கி வருகிற அந்த இடத்தில், அதனைப் பிரித்து, கூடுதலாக தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தர முன் வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.*

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையினுடைய அரசாணை எண் டிஎன். 376-ன்படி, குறிப்பாக புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் அமைக்க வேண்டுமானால், 2,000 ஹெக்டேர் பரப்பளவு இருக்கவேண்டும் அல்லது 4,850 ஏக்கர் பரப்பளவு விவசாய நிலங்கள் இருக்கவேண்டும். அந்தச் சங்கத்திலே சேரும் உறுப்பினர்கள் குறைந்தபட்சம் 60 விழுக்காடு பயிர்க்கடன் மட்டுமல்லாமல், அனைத்துவகையான கடனும் பெறக்கூடிய வாய்ப்பு வசதி உள்ள சங்கமாக இருக்கவேண்டும். ஆண்டுக்குக் குறைந்தது 2 கோடி அளவிற்கு வணிக நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும். அப்போதுதான் ஒரு ஐந்து இலட்சம் ரூபாயாவது கிடைக்கும். அப்போதுதான் அந்தச் சங்கத்தை நலிவுறாமல் காப்பாற்றுவதற்கும் புனரமைப்பதற்கும் வாய்ப்பாக இருக்கும்.*

2013 மே 13]

தொடர்ந்து அந்தச் சங்கம் அந்தப் பகுதி மக்களுக்கு சேவையாற்ற முடியும் என்ற நிலையில் இதுபோன்ற விதிகளுக்குட்பட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்தப் பகுதியில் மேற்கண்ட விதிகள் பூர்த்தியாகும்பட்சத்தில் பக்கத்திலிருக்கிற சங்கங்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லாதவகையில் இருக்குமேயானால், புதிய சங்கம் தொடங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும். இல்லாவிட்டால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, இதே காளம்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கத்தினுடைய கிளையை அந்தப் பகுதியில் தொடங்குவதற்கு அதற்கான ஒரு கட்டட வசதியை உருவாக்கிக் கொடுப்பதற்கு அந்தப் பகுதி மக்கள் முன்வருவார்களேயானால் அதைச் செய்வதற்கு துறை ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 469, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

**469—**

**சார் கருவூலக் கட்டடம்**

***5326**—**திரு. என். முருகுமாறன்:**

*மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவில், சார் கருவூல அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா*

TRUTH ALONE TRIUMPHS